மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை
புதுச்சேரி

**<u>கிராம வேலை உறுதித்திட்டப்பணியாளர்கள் (Gram Rozgar Sevaks) தேர்வு செய்ய விண்ணப்பங்கள் வரவேற்க்கப்படுகின்றன.</u>**

தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் புதுச்சேரி மாவட்டத்தின், வீராம்பட்டினம், கல்மண்டபம் மற்றும் மடுகரை(மேற்கு) ஆகிய கிராம பஞ்சாயத்துக்களில் கிராம வேலை உறுதித்திட்டப்பணியாளர்களை (Gram Rozgar Sevaks) நியமிப்பதற்காக தகுதியுடைய விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்க்கப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் **புதுச்சேரி மாவட்டத்தின் வீராம்பட்டினம், கல்மண்டபம் மற்றும் மடுகரை(மேற்கு) ஆகிய கிராம பஞ்சாயத்துக்களில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.** பணி நியமனம் தற்காலிகமானது. மாத தொகுப்பு ஊதியம் ரூ4,000/- (ரூபாய் நான்காயிரம்) மட்டும் விண்ணப்பதாரர்கள் மேல் நிலை (H.S.C.) தேர்ச்சி பெற்றவராக இருக்க வேண்டும்.

மேலே குறிப்பிட்ட பணிக்கு விண்ணப்பிக்க விருப்பமுள்ளவர்கள் ஒரு முழு வெள்ளைத்தாளில் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளபடி விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து **"<u>திட்ட அதிகாரி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, புதுவை வீட்டு வசதி வாரிய கட்டிடம், 2வது மாடி, நெல்லித்தோப்பு, புதுச்சேரி-605005.</u>"** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் அஞ்சல் உறை மீது "ஊரக வேலை உறுதித் திட்ட பணியாளர் தேர்வுக்கான விண்ணப்பம்" என்று குறிப்பிட வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட **விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 27/12/2011 மாலை 4.00** மணி தாமதமாக பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படமாட்டாது.

பெறபபட்ட விண்ணப்பங்கள் கிராம பஞ்சாயத்து வாரியாக பிரிக்கப்பட்டு விண்ணப்பதாரர்கள் நேர்முக தேர்விற்கு அழைக்கப்படுவார்கள்

மேலும் விவரங்களுக்கு புதுச்சேரி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் **http://drda.puducherry.gov.in** என்ற இணைய தளத்தில் அறிந்து கொள்ளலாம்.

## மாதிரி விண்ணப்பப் படிவம்
## ஊரக வேலை உறுதித் திட்ட பணியாளர் பணிக்கு விண்ணப்பம்

| | | | |
|---|---|---|---|
| 1. | விண்ணப்பதாரரின் பெயர் | : | |
| 2. | தகப்பனார் பெயர் | : | |
| 3. | பிறந்த தேதி **(சான்று நகல் இணைக்கப்பட வேண்டும்)** | : | |
| 4. | கல்வித் தகுதி **(சான்று நகல் இணைக்கப்பட வேண்டும்)** | : | |
| 5. | பாலினம் | : | |
| 6. | பிரிவு - ஆதிதிராவிடர் / பழங்குடியினர்/ மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ பொதுப் பிரிவினர். | : | |
| 7. | வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து கொண்டவரா? | : | ஆம் / இல்லை |
| | ஆமெனில் பதிவு எண் மற்றும் நாள் **(பதிவுச்சான்று நகல் இணைக்கப்பட வேண்டும்)** | : | |
| 8. | விண்ணப்பதாரர் வசிக்கும் கிராம பஞ்சாயத்தின் பெயர் | : | |
| 9. | வட்டாரம் | : | |
| 10. | தொடர்புக்கான முகவரி | : | |

**விண்ணப்பதாரரின் பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஒட்டவும்**

### உறுதி மொழி

......................................................( **விண்ணப்பதாரரின் பெயர்)** த/பெ ................................ **(தந்தை பெயர்)**

**ஆகிய நான் மேலே குறிப்பிட்ட தகவல்கள் அனைத்தும் உண்மையென உறுதி அளிக்கின்றேன் மேலும் ஊரக வேலை உறுதித் திட்ட பணிக்காக தேர்ந்தெடுக்கும் பட்சத்தில் மாத தொகுப்பு ஊதியம் ரூ.4,000/- என்பதை அறிவேன் என்றும், ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் எனக்கு அளிக்கப்படும் பணிகளை திட்ட விதிகளின் படி சிறந்த முறையில் செயலாற்றுவேன் என்றும் உறுதி அளிக்கின்றேன்.**

**விண்ணப்பதாரரின் கையொப்பம்**